# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● மே 26, 2018 Weekly E-paper ● May 26, 2018


# ஆலை நின்று கொன்றது, அரசு அன்றே கொன்றது!








## மா.உதயகுமார்

மூன்று மாநிலங்களில் விரட்டியடிக்கப்பட்ட ஸ்டெர்லைட் ஆலை தமிழ்நாட்டில் 1994ஆம் ஆண்டு முளைவிடத் தொடங்கியது. இதுவரை நச்சைப் பரப்பி உயிர்களைக் கொள்ளை கொண்ட ஸ்டெர்லைட் இப்போது நெஞ்சைத் துப்பாக்கிக் குண்டுகளால் துளைத்து உயிர்களைக் கொண்டு போய்விட்டது. “வேதாந்தா” நிறுவனத்தை உலக அளவில் பெரிய நிறுவனமாக வளர்த்தெடுக்க வேண்டும் என்கிற அதன் நிறுவனர் அனில் அகர்வாலின் கனவால் அப்பாவி மக்கள் இங்கு பலியாகியிருக்கின்றனர். ‘வேதாந்தா’ என்றாலே தமிழர்களுக்கு எப்போதுமே வேதனைதான். இந்த நிறுவனம் இதுவரை செய்திருக்கும் விதி மீறல்களையும், கொடுத்திருக்கும் பொய் ஆவணங்களையும் பார்க்கும்போது இவர்கள் பணத்திற்காக எதையும் செய்யத் துணிபவர்கள் என்பது விளங்குகிறது.




தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியமும், சுற்றுச்சூழல் அமைச்சகமும் சில நிபந்தனைகளின் பேரில் மறுப்பின்மைச் சான்றிதழ் (NOC) கொடுத்தன. குறிப்பாக விரைவான சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு (Environmental Impact Assessment) செய்ய வேண்டும் என்பதும், மன்னார் வளைகுடாவிலிருந்து 25 கி.மீ. தொலைவிலேயே ஆலை அமைக்கப்பட வேண்டும் என்பதும் ஆகும். இந்த இரண்டு நிபந்தனைகளையும் வேதாந்தா பின்பற்றவில்லை. மக்களிடம் கருத்துக்கேட்பு நடத்தாமலேயே சுற்றுச்சூழல்பாதிப்பு மதிப்பீடு (Environmental Impact Assessment) கொடுக்கப்பட்டது. மன்னார் வளைகுடாவிலிருந்து 14 கி.மீ. தொலைவிலேயே ஆலை அமைக்கப்பட்டது. ஆலை அமைப்பதற்கும் செயலபடுவதற்கும் அனுமதி பெறும்போதே இவ்வளவு அத்துமீறல்கள் என்றால் ஆலை அமைக்கப்பட்ட பிறகு எவ்வளவு அத்துமீறல்களைச் செய்திருப்பார்கள்? ஆண்டிற்கு 4 இலட்சம் டன் காப்பர் என்ற இலக்குடன் செயல்பட்ட ஸ்டெர்லைட், உயிர்களைக்காவு வாங்கவும் தவறவில்லை. ஆலை தொடங்கிய நாளிலிருந்தே போராட்டங்களும் தொடங்கின. 1998 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றம் வேதாந்தாவின் விபரீதங்களை உணர்ந்து ஸ்டெர்லைட் ஆலையை மூட உத்தரவிட்டது. ஆனால் சில நாட்கள் மட்டுமே ஆலை மூடப்பட்டது. மீண்டும் ஆலையைத் திறக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்ட தோடு, நாக்பூரை அடிப்படையாகக் கொண்ட National Environmental Engineering Research Institute (NEERI) என்னும் நிறவனத்தை ஸ்டெர்லைட் ஆலையை ஆய்வு செய்யவும் உத்தரவிட்டது. இந்த நிறுவனம் ஸ்டெர்லைட் ஆலையின் பாதிப்புகளைக் குறைத்துக் காட்டியது. ஒரு கோடி மதிப்பிலான பல ஒப்பந்தங்கள் இந்நிறுவனத்திற்குப் பின்னர் கிடைத்தது இங்கு பொருத்திப் பார்க்கப்பட வேண்டியது.

2003 ஆம் ஆண்டு தமிழ் மாசுக் கட்டுபாட்டுவாரியம் ஆண்டிற்கு 70,000 டன்மட்டுமே உற்பத்தி செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாட்டை விதித்தது. ஆனால் 2004 ஆம் ஆண்டு ஸ்டெர்லைட் 1,75,242 டன் காப்பர் ஆனோட்களை உற்பத்தி செய்தது.

இப்படி தொடர்ந்து மக்கள் எதிர்ப்பையும், நீதி மன்ற வழக்குகளையும் சந்தித்து வந்த ஸ்டெர்லைட் எந்த பின்னடைவையும் சந்திக்காமல் 2008 ஆம் ஆண்டு நாள் ஒன்றுக்கு 900 டன் என்ற அளவிலிருந்து 1200 டன் என்ற அளவிற்கு உற்பத்தியை அதிகப் படுத்தியது. சுற்றுச் சூழல் மாசையும் அதிகப்படுத்தியது. பல முறை நச்சுக் காற்று கசிந்து மக்கள் பாதிப்புக்குள்ளாகினர். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் புகார்களைக் குவித்தனர். இது போக பாதுகாப்பின்மையால் ஆலைக்குள் ஊழியர்களுக்குண்டான விபத்துகள் ஒரு பெரும்பட்டியலாக இருக்கிறது. 2010–2013 ஆம் ஆண்டுகளுக்குள் நடந்த 8 விபத்துகளில் 3 பேர் உயிரிழந்தனர் பலர் படுகாயமடைந்தனர்.

2013 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் ஸ்டெர்லைட் ஆலை செய்திருக்கும் விதி மீறல்களையும், சுற்றுச் சூழலுக்கு ஏற்படுத்தியிருக்கும் பாதிப்புகளையும் சுட்டிக் காட்டிக் கடுமையாகக் கண்டித்தது. ரூ.100 கோடி அபராதமும் விதித்தது. ஆனால் ஆலையை மூட உத்தரவிட மறுத்துவிட்டது.

இந்த நிலையில்தான் இங்கு போராட்டங்கள் தொடர்ந்து நடந்துவருகின்றன. அதன் உச்ச கட்டமாகத் துப்பாக்கிச் சூடு. ஸ்டெர்லைட் ஆலை மக்களை நின்று கொன்றது. ஆனால் அரசு அன்றே கொன்றது. ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**


இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**



**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

பொதுச்செயலாளர்: சுப.வீரபாண்டியன்

**ஆ.சிங்கராயரின்**

**கண்டன அறிக்கை...**

தமிழர்கள் தமக்கான உரிமைகளைக் கூடப் போராடித்தான் பெற வேண்டியிருக்கிறது என்று தன்னம்பிக்கையிழந்து பலரும், பல இடங்களில் பேசக்கேட்ட நமக்குத் தேர்தெடுக்கப்பட்ட ஒரு அரசே மக்களைக் குறிபார்த்துச் சுட்டுக் கொன்ற ஒரு பேரிடிச் செய்தி, நம் நெஞ்சைத் துளைத்திருக்கிறது.

இராஜபக்சே இலங்கையில் மட்டுமல்ல, தமிழகத்திலும் இருக்கிறார்கள் என்பதை ஈபிஎஸ் - ஓபிஎஸ் மெய்ப்பித்திருக்கிறார்கள். தமிழகத்தை அமைதியாக வைத்துவிடக்கூடாது என்பதில், பாஜகவின் உளவு அமைப்பான அதிமுக அரசு, தொடர்ந்து வேலைசெய்து வருகிறது என்பது இந்தப் படுகொலையின் மூலமாக வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது.

திட்டமிட்டு ஸ்டெர்லைட் ஆலைக்காக அப்பாவிப் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட இப்படுகொலையைத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை மிகக்கடுமையாகத் , தன் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

இத்தகைய அலங்கோலங்களை அரங்கேற்றியுள்ள தமிழக அரசும் அதோடு துணை நிற்கின்ற மத்திய அரசும் மிகுந்த கண்டனத்திற்கு உரியன. இரண்டு ஆளும் கட்சி களும், ஆட்சியிலிருந்து அகற்றப்படும் நாளே இந்த மண்ணுக்கு நன்னாள்.

இந்த உரிமைப் போரில் உயிர் நீத்தப் போராளிகளின் குடும்பங்களுக்குத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பாக எங்கள் வேதனையையும், ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

23,05,2018

சென்னை - 600 024

ஆ.சிங்கராயர்,

( மாநிலத் துணைப் பொதுச் செயலாளர்.)
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

122/130, என்.டி.ஆர்.தெரு, ரெங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை-24.
044-4204 7162 karunchattai@gmail.com

# எங்களைச் சுட்டாலும் கவலை இல்லை!



***தலைமைச் செயலகத்தில் போராட்டம் நடத்திக் கைது செய்யப்பட்டு ராயபுரம் தனியார் மண்டபத்தில் அடைக்கப்பட்டிருந்த போது தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் இருந்து...***

திட்டமிட்டு வேண்டும் என்றே குறிவைத்துச் சுட்டுள்ளார்கள். முதல்வர் போகாமல் இருப்பாரா? எத்தனையோ பேர் முதல் அமைச்சர்களாக இருந்துள்ளனர். இப்போது இதுபோன்ற துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. அவர்கள் சென்று பார்த்துள்ளனர். ஆனால் தற்போது பதவியைத் தக்க வைக்க வேண்டும் என்கிற நாடகத்தை இவர்கள் நடத்தி வருகிறார்கள்.

இதை வைத்து எங்கள் ஆட்சியைக் கவிழ்த்துவிடாதீர்கள் என காலில் விழுவதற்கு எடப்பாடி ஆளுநரைச் சந்தித்து இருப்பார். எங்கள் மீது எந்தக் குற்றம் சுமத்தினாலும் எங்களுக்குக் கவலை இல்லை. அங்கு சுட்டது போல் எங்களைச் சுட்டாலும் கவலை இல்லை. எடப்பாடி உடனடியாக ராஜினாமா செய்யவேண்டும். தற்காப்பு என்றால் எவ்வளவோ இருக்கிறது. ஆனால் எடுத்த எடுப்பில் துப்பாக்கியை வைத்துச் சுட்டுள்ளனர். ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## எடப்பாடியே உடனே பதவி விலகு!

“சிரமறுத்தல் மன்னருக்குப் பொழுது போக்கு, மக்களுக்கோ உயிரின் வாதை” புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் வரிகள் இவை.

தூத்துக்குடியில் துப்பாக்கிச் சூடு. காவல் துறையின் அத்துமீறல், தடியடி. காயம்பட்டோர் ஏராளம், உறுப்புகள் சிதைந்தோர் கதறல்கள். துப்பாக்கிச் சூட்டில் சிரம் தொங்கி உயிரின் வாதையில் தூத்துக்குடி.

நட்சத்திர விடுதி. ‘பூப்புனித நீராட்டு’ நிகழ்ச்சி. துணை முதல்வர் ஓ.பி.எஸ். அவரின் அமைச்சர்கள் சிலர் இந்த நிகழ்ச்சியில் பொழுது போக்கியிருக்கிறார்கள், தூத்துக்குடியை மறந்து.

துப்பாக்கிச் சூடு குறித்து விவரம் தெரியவில்லை என்கிறார் முதல்வர் எடப்பாடி. 144 தடை சட்டம் இருப்பதால், தான் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்கத் தூத்துக்குடி போகவில்லை என்றும் சொல்கிறார்.

எல்லாம் சரி! அங்கே தூப்பாக்கிச் சூடு நடத்த உத்திரவிட்டது யார்?

மாவட்ட ஆட்சியரா? காவல் கண்காணிப்பாளரா? காவல்துறை துணைத் தலைவரா? மாநிலக் காவல்துறைத் தலைவரா? அல்லது இரகசியமாக அங்கே ஊடாடிய முன்னாள் காவல்துறைத் தலைவர் அலெக்சான்டரா?

எதுவுமே தெரியாது என்றால், முதல்வராக இருக்க என்ன தகுதியிருக்கிறது எடப்பாடிக்கு?

இது வரை 13 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள், எடப்பாடி அரசால், அவரின் கீழ் உள்ள காவல்துறையால்.

எதனால் சமூக ஊடகங்களை முடக்கினீர்கள்? அரசின் கோர அடக்கு முறைத் தாக்குதல்கள் வெளியே தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகவா?

தூத்துக்குடி மக்கள் போராட்டத்தைத் தமிழகக் காவல்துறையால் அடக்க முடியாதாம். மத்திய துணை இராணுவப் படையை உதவிக்குக் கேட்டிருக்கிறாராம் தலைமைச் செயாலாளர் கிரிஜா வைத்தியநாதன்.

தமிழ்நாட்டில் ஒரு மாவட்டத் தமிழ் மக்கள் மீது உள்நாட்டு யுத்தம் நடத்துகிறதா தமிழக அரசு!

இன்று மாவட்ட ஆட்சியர் சொல்கிறார் ஸ்டெர்லைட் ஆலை முடப்படும் என்று. இதை ஏன் நேற்று சொல்லவில்லை.

மாவட்ட ஆட்சியரின் ஒற்றை வார்த்தையில் ஸ்டெர்லைட்டை மூட முடியாது. இது குறித்து முதல்வர் திட்டவட்டமாக எதையும் சொல்லவில்லை, இதுவரை.

“நான் சொல்வேன், நீ கோர்ட்டுக்குப் போ” என்ற விளையாட்டு இங்கே வேண்டாம். பா.ஜ.க.வின் எடுபிடியான எடப்பாடியால் ஸ்டெர்லைட்டை இழுத்து மூடி முடியாது. அனில் அகர்வால் மோடியின் நண்பர்.

அதற்காக அந்த ஆலையை மூடாமல் விடவும் மாட்டார்கள் மக்கள். மக்களின் சக்தியை மீறிய சக்தி உலகில் எங்கும் இல்லை.

இ.பி.எஸ் - ஓ.பி.எஸ் இனியும் பதவியில் தொடரக்கூடாது.

உடனே பதவி விலகு, அரியணையை விட்டு இறங்கு, ஸ்டெர்லைட்டை மக்கள் பார்த்துக் கொள்வார்கள்.



## எடப்பாடியா

# 24ஆம் புலிகேசியா?

● சுப.வீரபாண்டியன்



### என்ன கேட்டார்கள் அந்த மக்கள்?

மாசுபடாத நிலமும் நீரும் கேட்டார்கள். 13 உயிர்கள் பறிபோயின. நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் உள்ளனர்.

தமிழக முதலைமைச்சரோ, அமைச்சர்களோ இன்னும் தூத்துக்குடி சென்று மக்களைப் பார்க்கவில்லை. ஏன் நீங்கள் யாரும் அங்கு செல்லவே இல்லை என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, "144 தடை இருக்கும்போது ஸ்டாலின் அங்கு சென்றதே தப்பு. சட்டத்தை மதிக்க வேண்டும்" என்கிறார் முதலமைச்சர். 144 பேர் இறந்து போனாலும், 144 தடைச் சட்டம்தான் முக்கியம் என்று கூறும் அரிய முதல்வர் நமக்குக் கிடைத்துள்ளார். அதனால்தான் திமுக செயல்தலைவர் தளபதி, வைகோ, கமல்ஹாசன், திருமாவளவன் என்று எல்லோர் மீதும் வழக்குத் தொடுத்துள்ளனர்.

இவ்வளவு பேரைச் சுட்டுக் கொல்வதற்கு யார் அனுமதி கொடுத்தது என்ற வினாவிற்கு, அனுமதி எல்லாம் இல்லை. இப்போ உங்களை யாராவது அடிக்க வந்தா நீங்க சட்டுன்னு தடுக்கத்தானே செய்வீங்க என்கிறார். 'சிரிப்பு போலீஸ்' மாதிரி இவர் என்ன சிரிப்பு முதலமைச்சரா என்று நமக்கு ஐயம் வருகிறது. சட்டென்று தடுப்பதும், சட்டென்று துப்பாக்கி எடுத்துச் சுடுவதும் ஒன்றாகுமா?

"உங்களுக்குத்தான் தெரியுமே, நான் இங்கேதான் இருந்தேன். தொலைக்காட்சியிலதான் பாத்தேன்" என்று சற்றும் கூசாமல் கூறுகின்றார். காவல்துறை, உளவுத்துறை எல்லாவற்றையும் தன் பொறுப்பில் வைத்துள்ள முதல்வர் சொல்லக்கூடிய விடையா இது?

அந்த ஆலைக்கு மின்சாரத்தைத் துண்டித்து விட்டோம், இனி அது தொடர்ந்து நடக்காது என்று முதல்வர் கூறிய சுவடு மறைவதற்குள், ஸ்டெர்லைட் ஆலையின் அதிபர் அனில் அகர்வால், "பராமரிப்பு வேலைகள் நடந்து கொண்டுள்ளன. விரைவில் அனுமதி பெற்று மீண்டும் ஆலை இயங்கும்" என்று தன் காணொளியில் கூறுகின்றார்.

முதல்வர் எடப்பாடி எந்த அதிகாரமும் இல்லாத, எந்த விவரமும் இல்லாத 24 ஆம் புலிகேசி மன்னனைப் போல் அரசுக்கட்டிலில் அமர்ந்துள்ளார். தில்லியிலிருந்து பாஜக தமிழ்நாட்டையும் ஆள்கின்றது.

என்ன செய்தாலும் தனக்கு வாக்குகள் விழாது என்பதால் பாஜக தமிழ்நாட்டை அழித்துவிட முடிவு செய்து விட்டதா என்று தெரியவில்லை. தமிழ்நாடு என்ன ஆனாலும் குற்றமில்லை, தன் நாற்காலி மட்டும் தனக்கு இருந்தால் போதும் என்று எடப்பாடி நினைத்துவிட்டார் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

மாவட்ட ஆட்சியர், காவல்துறைக் கண்காணிப்பாளர் ஆகியோரை இடமாற்றம் செய்துவிடுவது எல்லாவற்றுக்குமான தீர்வு ஆகாது. மின்சாரம், தண்ணீரை நிறுத்தி விட்டோம் என்னும் 'கண்ணாமூச்சி' விளையாட்டு நிரந்தரமானதும் ஆகாது.

துப்பாக்கிச் சூட்டிற்கு நீதி விசாரணை வேண்டும். ஸ்டெர்லைட் ஆலை நிரந்தரமாக மூடப்பட வேண்டும்.

எடப்பாடி அரசு உடனடியாகப் பதவி விலக வேண்டும். மோடி அரசு முடிவுக்கு வர வேண்டும்.

இவை அனைத்தும் நடந்தால்தான் நாடு உருப்படும். ●

---

# ஸ்டெர்லைட்டும், பா.ஜ.க.வும்...

● வெற்றிச்செல்வன்

**வே**தாந்தா நிறுவனத்தின் ஒரு அங்கமான ஸ்டெர்லைட் நிறுவனம் தூத்துக்குடியில் தாமிர உருக்காலையை நடத்தி வருகிறது. அது தொடங்கப்பட்ட நாள் முதலே மக்கள் அந்த ஆலையால் ஏற்படும் சுற்றுச்சூழல் கேடுகளையும், நோய்களையும் குறிப்பிட்டு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இதனிடையே அந்த ஆலையின் விரிவாக்கத்திற்கு அனுமதி கோரப்பட்டது. அதற்கு அனுமதி வழங்கக்கூடாது என்று மக்கள் தீவிரமாக எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால், அதையும் மீறி ஸ்டெர்லைட் நிறுவனம் கட்டுமானப் பணிகளை நடத்திக்கொண்டிருந்தது.

பாஜக அரசு பதவியேற்றதும் முந்தைய காங்கிரஸ் அரசு கொண்டு வந்த சுற்றுச் சூழல் குறித்த சட்டத்தில் புதிய விளக்கமொன்றைக் கொடுத்தது. "14.09.2006 க்கு முன்பு அறிவிக்கை செய்யப்பட்ட தொழிற்பேட்டை / தொழிற் பூங்கா ஆகியவற்றில் தொடங்கப்படும் எந்தவொரு தொழிற்சாலைக்கும் புதிதாகச் சுற்றுச்சூழல் அனுமதி பெறத் தேவையில்லை என அந்த விளக்கத்தில் பாஜக அரசு கூறியது (O.M.No.J-11013/36/2014-IA-I dated 10th December 2014) இதன்மூலம் அந்தத் தொழிற்பேட்டை / தொழிற்பூங்காவுக்குச் சுற்றுச்சூழல் அனுமதி இருக்கிறதா என்பது முக்கியமில்லை என பாஜக அரசு ஆக்கியது. அந்த விளக்கத்தின் அடிப்படையில்தான் ஸ்டெர்லைட் நிறுவனம் தனது கட்டுமானப் பணிகள் சட்டத்துக்கு உட்பட்டவை என வாதிட்டு வந்தது.

பா.ஜ.க. அரசு அளித்த சட்டத்துக்கு முரணான விளக்கத்தை தேசிய பசுமைத் தீர்ப்பாயம் 2016ஆம் ஆண்டு ரத்து செய்ததோடு மக்கள் கருத்தறியும் கூட்டம் கட்டாயம் என அறிவித்துவிட்டது. ஆனால் 2016 ஆம் ஆண்டைய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவு அதற்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டுவிட்ட தமது கட்டுமானப் பணியைக் கட்டுப்படுத்தாது என ஸ்டெர்லைட் நிறுவனம் வாதிட்டது. அந்த வழக்கில்தான் இப்போது சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பா.ஜ.க. அரசு இந்த அளவுக்கு சட்டத்துக்குப் புறம்பாக விளக்கத்தை அளித்து ஸ்டெர்லைட் நிறுவனத்துக்கு உதவ வேண்டியதன் தேவை என்ன என்ற கேள்வி எழலாம். 2013-14ஆம் ஆண்டுகளில் கார்ப்பரேட் நிறுவனங்களிடம் அதிக அளவு நன்கொடை பெற்றதில் முதலிடம் வகிக்கும் கட்சியாக பா.ஜ.க.வே இருக்கிறது. அக்கட்சி 1480 பேரிடம் 363 கோடி ரூபாய் நன்கொடை பெற்றதாகத் தேர்தல் ஆணையத்திடம் தெரிவித்திருந்தது. கார்ப்பரேட் நிறுவனங்கள் மொத்தமாக 120 கோடி ரூபாயை பா.ஜ.க.வுக்கு நன்கொடையாக அளித்திருந்தன. அப்படி மிக அதிகளவில் நன்கொடை அளித்த கார்ப்பரேட் நிறுவனங்களின் வரிசையில் ஸ்டெர்லைட் நிறுவனமும் அதன் தாய் நிறுவனமான வேதாந்தா குழுமமும் இருக்கிறது. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததில் இருந்து அதனுடைய பொருளாதாரக் கொள்கைகள் எல்லாம் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சாதகமாகவே இருந்து வருகின்றன என்பதை எல்லோருமே அறிவர். அதற்கான காரணம் அவை அள்ளிக்கொடுக்கும் நன்கொடைதான். இப்போதும்கூட தூத்துக்குடியில் நடத்தப்பட்ட படுகொலைகளைக் கண்டிக்காத கட்சி பா.ஜ.க. மட்டும்தான்.

தூத்துக்குடி படுகொலைகளைக் கண்டித்து இந்தியா முழுவதும் கண்டனக் குரல்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் பிரதமர் நரேந்திர மோடியோ கிரிக்கெட் வீரர் விராத் கோலியோடு உடற்பயிற்சி செய்யும் சவாலில் ஈடுபட்டிருக்கிறார். துப்பாக்கிச் சூடு பற்றியோ ஸ்டெர்லைட் ஆலை பற்றியோ அவர் ஒரு வார்த்தையும் கூடப் பேசவில்லை.

அவர்களது மௌனமே தூத்துக்குடியில் ஸ்டெர்லைட்டுக்கு ஆதரவாக ஏவப்பட்டிருக்கும் வன்முறையின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பதைப் புலப்படுத்துகின்றது. ●



# குருதியில் நீந்தும் காலம்

● மனுஷ்ய புத்திரன்

சுடுடா சுடு

நிராயுதபாணிகளை
நெஞ்சுக்கு நேராகச் சுடு
குண்டுகள் வீணாக்காமல் சுடு
பத்துக்குண்டுகளுக்குப்
பத்துப்பேர் விழவேண்டும்

முதலில் ஆகாயத்திற்கு நேரே சுடவேண்டியதில்லை
முதலில் மூட்டுக்கு கீழே சுடவேண்டியதில்லை
கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வேண்டியதில்லை
வீண் செலவுகளைத் தவிர்க்கவேண்டும்
துப்பாக்கியை நெஞ்சுக்கு நேரே உயர்த்து
நாங்கள் சாகப்பிறந்தவர்கள்
மக்கள் வாழ்வதற்காகச் சாகப்பிறந்தவர்கள்

சுடுடா மறுபடி சுடு
குருவிகளைச் சுடுவதென்றால்கூட
குறிபார்க்கவேண்டும்
மிருகங்களைச் சுடுவதென்றால்கூட
மறைந்து காத்திருந்து சுடவேண்டும்
மக்களைச்சுட எதுவுமே தேவை இல்லை
எதிர்த்து நிற்பவர்கள் நெஞ்சில்
ஈய ரவைகளைச் செலுத்து
அவர்கள் அதைப் புரிந்துகொள்வதற்குள்
தம் நெஞ்சில் வழியும் குருதியைக்கண்டு
அவர்கள் வியக்கும்படி
அத்தனை விரைவாய் சுடு

மக்கள் நச்சுக்காற்றை எதிர்த்துப்போராடினார்கள்
கேன்ஸரை எதிர்த்துப்போராடினார்கள்
கருவிலிருக்கும் தம் குழந்தைகள்
ஊனமடைவதை எதிர்த்துப்போராடினார்கள்
எளிய மக்கள் தாங்கள் நஞ்சாகக்கப்படுகிறோம்
என்று அறிந்த நாளில் தெருவுக்கு வந்தார்கள்
பின்னர் அவர்கள் வீடு திரும்பவே இல்லை
இப்போது துப்பாக்கிக்குண்டுகளால்
அவர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்கப்பட்டிருக்கிறது

ஒரு பதினேழு வயதுச் சிறுமி
ஒரு அறுபட்ட புறாவைப்போல
ரத்த வெள்ளத்தில் மிதந்துகொண்டிருக்கிறாள்
இன்னும் சூடு அடங்காத அவளது உதடுகள்
எஞ்சிய முழக்கங்களை முணுமுணுக்கின்றன

திறந்த கண்களுடன்
ஒரு இளைஞன் கைகளை விரித்தபடி
வீழ்ந்துகிடக்கிறான்
அவன் மனைவி மார்பில் விழுந்து கதறுகிறாள்
அவள் நெற்றியில் துப்பாகிக் குருதி
குங்குமம் போலப் பரவுகிறது
இப்படித்தான் நீதி கேட்கப்படுகிறது

இந்த அந்தியின் வெளிச்சம்
குருதிவண்ணத்தில் இருக்கிறது
இந்த அந்தியின் காற்றில்
குருதியின் உப்புக் கரிக்கிறது



பத்துப்பேர் இறந்துவிட்டார்கள்
இன்றைய இலக்கு நிறைவடைந்ததா?
திரும்பிச்செல்லுங்கள்
உங்கள் முதலாளிகள்
இன்றிரவு நிம்மதியாகக் குடிப்பார்கள்
உங்களுக்கு ஆணை பிறப்பித்தவர்கள்
இன்றிரவு நிம்மதியாகப் புணர்வார்கள்

ஊரில் பத்துவீடுகளில்
சாவின் அதிகாரம் நிரம்பியிருக்கிறது
பத்துச் சவ ஊர்வலங்கள் ஒரே நேரத்தில்
கிளம்புகின்றன
மக்கள் மனம் சிதறி அழுகிறார்கள்
இயலாமையுடன் சாலைகளை மறித்து
லத்தியால் அடிவாங்கி ஓடுகிறார்கள்

மக்களை இன்னும் எப்படி
அச்சுறுத்துவதெனெ
வேட்டை நாய்கள்
ரகசியமாகக் கூடிப்பேசுகின்றன
பத்துப்பேரைக் கொல்லும் அளவு
தனக்கு அதிகாரம் இருப்பதைக் கண்ட
தலைவன்
அந்தரங்கக் கிளுகிளுப்புடன்
நீலிக்கண்ணீர் வடிக்கிறான்

நமது காலம் நெருப்பில் நீந்துகிறது
நமது காலம் கண்ணீரில் நீந்துகிறது
நமது காலம் குருதியில் நீந்துகிறது

அடுத்த வெடியோசைக்கு மக்கள்
காத்திருக்கிறார்கள்
தங்களை
ஆயத்தப்படுத்திக்கொள்கிறார்கள்

எதற்கு என்று கேட்காதீர்கள்
மக்கள் தங்களை வன்மத்துடன்
ஆயத்தப்படுத்திக்கொள்கிறார்கள் ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.